பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 128

வியாழக்கிழமை
03 ஏப்ரல் 2025

பங்குனி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## உள்ளாட்சி தேர்தல்; முறைப்பாடு 413!

03

# இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்கவும்!

### தமிழக சட்டசபையில் தீர்மானம்

**சென்னை, ஏப்ரல் 3**

**இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்ச தீவை, விரைவில் மீட்டெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக சட்ட சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

11

பிரதமர் மோடியின் பயணத்தில்

## இந்தியாவுடன் ஒப்பந்தங்கள்!

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 3
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான பயணத்தின்போது டிஜிட்டல் பொருளாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல துறைகளில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் 11



## மோடியின் வருகையால் பாதுகாப்பு அதிஉச்சம்!

இந்தியாவிலிருந்து சிறப்புக்குழு வருகை

கொழும்பு, ஏப். 3
இந்தியப் பிரதமர் மோடி, நாளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அவருடைய வருகையை முன்னிட்டு உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
பிரதமர் மோடியின் பாதுகாப்பு ஏற்பாடு 11

## ஆசிரியர்கள் மீது அவதூறு முழங்காவிலில் போராட்டம்!

03

முன்னாள் இராணுவத் தளபதிகளுக்கு

## பிரிட்டனின் தடைதொடர்பில் ஆராய்வதற்காகத் தனிக்குழு

கொழும்பு, ஏப். 3
ஸ்ரீலங்கா படைகளின் முன்னாள் தளபதிகளுக்கு எதிராகப் பிரிட்டனால் பிறப்பிக்கப்பட்டுள்ள தடைதொடர்பில் ஆராய்ந்து, அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று 09

## தென்னக்கோனுக்கு எதிரான பிரேரணை ஏப்ரல் 8இல்!

கொழும்பு, ஏப். 3
பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்காக விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல் 09

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி

## 8 ஆண்டுகளுக்கு 500 மில். டொலர்

உலக வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 3
வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உலக வங்கியால் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக, 500 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டு தொடக்கம் 2034ஆம் ஆண்டுவரை மூன்று கட்டங்களாக இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. 09

உண்மைப் பிரதிகள் உள்ள

## வேட்புமனுக்களை ஏற்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு!

கொழும்பு, ஏப்ரல் 3
உள்ளூராட்சித் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களில், 'உண்மைப் பிரதிகள்' உள்ள வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப் 11

50 ஆண்டுகளின் பின்னர்

## மாவிட்டபுரம் கந்தனுக்கு மகா கும்பாபிஷேக விழா

யாழ்ப்பாணம், ஏப். 3
வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா 50 ஆண்டுகளுக்குப் பின்னர் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.07 மணி தொடக்கம் காலை 10.09 மணி வரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது. 09

## 50இல் ஒரு குழந்தை ஓட்டிசத்தால் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 3
இலங்கையில் ஐம்பதில் ஒரு குழந்தை ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்டிருக்கச் சாத்தியங்கள் உள்ளன என்று குடும்பநல சுகாதார பணியகத்தின் சமூக மருத்துவ நிபுணர் ஆசிரி ஹேமமாலா 11



முச்சந்தி முரளி

'அந்தாள் இஞ்ச வாற நேரமாப் பார்த்து கச்சதீவு விசயமா ஒரு செக் வைச்சிருக்கினம் கண்டியளோ'

## வயிற்றோட்டம் ஏற்பட்டு பச்சிளம் சிசு உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 3
பிறந்து 43 நாள்களான பெண் சிசுவொன்று வயிற்றோட்டம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளது. இளவாலை - உயரப்புலம் பகுதியில் நேற்று இந்தத் துயரச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி தாயொருவருக்கு ஆண், பெண் என இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன. அந்தக் குழந்தைகளில் ஆண்சிசு தெல்லிப்பழை மருத்துவமனையில் (கண்ணாடிப்பெட்டி) வைத்துப் பராமரிக்கப்படுகின்றது. பெண் சிசு தாயாரு 11

## யாழ். மாவட்டச் செயலகத்தில் குடிவரவு, குடியகல்வுச் சேவை

விரைவில் ஆரம்பமாகும்; அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 3
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தை யாழ். மாவட்டச் செயலக வளாகத்தில் இந்த மாதத்துக்குள் நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.
இது தொடர்பாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கை 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4036 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 09 52 58 66 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1103 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 17 51 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 062 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 6 1 8 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2142 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கங்கள் | 01 30 61 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5794 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 5 1 2 7 6 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1824 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 29 30 62 74 |
| விசேட எழுத்து | Z |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0369 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 2 7 6 9 |

# மதச்சுதந்திரம் இலங்கையில் சரிவு

## அமெரிக்கா கரிசனை

கொழும்பு, ஏப். 3

**இலங்கையில் மதச்சுதந்திர சூழல் குறைவடைந்துள்ளதாக அமெரிக்காவின் சர்வதேச மதச்சுதந்திர ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, இலங்கை 'சிறப்புக் கண்காணிப்புப் பட்டியலில்' இணைக்கப்பட வேண்டும் என அமெரிக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.**

அமெரிக்காவின் சர்வதேச மதச் சுதந்திர ஆணைக்குழு 2024 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பௌத்த சமயத்துறைகள் திணைக்களம் மற்றும் கலாசார அமைச்சுடன் மத நிறுவனங்களின் நிலப்பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் நடத்தவேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதே வேளை, இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், பயங்கரவாதத்தை வரையறுக்கும் சட்டச்சூழலைத் தெளிவுபடுத்துவதற்கும் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தேசியவாத அமைப்புகள் முஸ்லிம் மதவழிபாட்டாளர்களை இலக்கு வைத்து நடத்திய செயற்பாடுகள் குறித்தும் விசாரணை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0502 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 0 7 2 8 6 5 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2768 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 01 23 60 76 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 16 33 52 61 |
| வெற்றி வாரம் | 4929 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| தினம் | புதன்கிழமை |
| | கன்னி |
| வெற்றி இலக்கம் | 20 25 40 53 |
| சீட்டிழுப்பு வாரம் | 4480 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கம் | 13 29 33 59 |
| வெற்றி வாரம் | 1944 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 19 45 48 54 |
| வெற்றி வாரம் | 2594 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 02.04.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 05 37 48 57 |
| வெற்றி வாரம் | 2117 |

# ஜப்பான் கப்பல்கள் கொழும்பில் தரிப்பு



கொழும்பு, ஏப். 3

ஜப்பானியக் கடல்சார் தற்காப்புப் படையின் புங்கோ மற்றும் இடாஜிமா கப்பல்கள் நல்லெண்ணப் பயணமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இந்தக் கப்பல்களானது இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் அங்கத்துவக் குழுவினர்கள் கொழும்புப் பிரதேசத்தில் உள்ள கவர்ச்சிகரமான சுற்றுலாத் தளங்களைப் பார்வையிடவுள்ளனர். இந்தக் கப்பல்கள் நாளை வெள்ளிக்கிழமை நாட்டிலிருந்து புறப்படவுள்ளன. (ச-இ)

# தென்னக்கோன் பதவி விலகார்

கொழும்பு, ஏப். 3

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் விரைவில் பதவி விலகக்கூடும் எனத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் அத்தகையதொரு முடிவை அவர் எடுக்கப்போவதில்லை என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறுகோரி ஆளுங்கட்சி உறுப்பினர்களால் சபாநாயகரிடம் பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளது. தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக குழு நியமிக்கவேண்டும் என்ற யோசனை எதிர்வரும் 8 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. அதன்பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. இந்த நிலையில் மேற்படி பிரேரணை விவாதத்துக்கு வருவதற்கு முன்னதாக தேசபந்து தென்னக்கோன் பதவிவிலகக்கூடும் என தகவல்கள் வெளியாகி இருந்தன. எனினும், அந்தத் தகவலை தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான வட்டாரங்கள் நிராகரித்துள்ளன. (ச-44)

# அதிஞாபக சக்தியுடைய இரண்டரை வயதுச்சிறுமி

## யாழில் சாதனை



யாழ்ப்பாணம், ஏப். 3

ஆயிரம் தமிழ்ச் சொற்களுக்கு அதன் ஆங்கில அர்த்தங்களைக் கூறி யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயகரன் தர்ஷ்விகா எனும் இரண்டரை வயதுச் சிறுமி அசத்தியுள்ளார்.

குறித்த சிறுமி காலநிலை, விலங்குகள், மின்னியல் சாதனங்கள், தொழில்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் அதிகமான பெயர்களின் ஆங்கில அர்த்தத்தை மிகவும் அசாத்தியமாகக் கூறி அசத்தியுள்ளார். தந்தையார் முச்சக்கர வண்டி ஓட்டுநராகவும் தாயார் குடும்பப் பெண்ணாகவும் பெரிய அளவிலான பின்புலங்கள் இல்லாத குடும்பத்தில் பிறந்த குறித்த குழந்தைக்கு இதுவரை ஏடு தொடக்கப்படாத நிலையில் இந்தச் சாதனையைப் புரிவது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (ச-25, 20, 125)

# மீண்டும் கட்சிதாவல்

கொழும்பு, ஏப். 3

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களில் மேலும் 6 பேர் மொட்டுக்கட்சியில் மீண்டும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்சவை களமிறக்குவதற்கு மொட்டுக்கட்சி தீர்மானித்திருந்த நிலையில் அந்த முடிவையும்மீறியே இவர்கள் ரணிலை ஆதரித்திருந்தனர். அவர்களில் சிலர் அரசியல் ரீதியில் அநாதைகளாகக்கப்பட்டுள்ள பின்புலத்திலேயே மீண்டும் தாய்க்கட்சி நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைய முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னாள் ஆளுநர் லக் ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச, முன்னாள் எம்.பி.களான அகில எல்லாவல, உபுல் ராஜபக்ச உள்ளிட்டவர்களே இவ்வாறு மொட்டுக் கட்சியில் மீள இணைந்துள்ளனர். (ச-44)



# பிரான்ஸுக்கு பிரதமர் பயணம்

பாரிஸ், ஏப். 3

யுனெஸ்கோவில் இடம்பெறவுள்ள உயர்மட்டக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய பிரான்ஸ் சென்றுள்ளார்.

'உலகப் பாரம்பரியச் சொத்துகளில் ஒன்றான இலங்கையின் புனித நகரமான அனுராதபுரத்தையும் அதனுடன் தொடர்புடைய வாழ்வியல் பாரம்பரியத்தையும் பாதுகாப்பதற்கான ஒருங்கிணைந்த மற்றும் நிலையான அணுகுமுறை' என்ற தலைப்பில் சர்வதேச நிபுணத்துவ மாநாட்டின் உயர் மட்டப் பிரிவில் பங்கேற்பதற்காக இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பிரான்ஸ் தலைநகர் பரிஸுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகமும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளார். (ச-சி-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CM B




சமூக வலைத்தளத்தில்

# ஆசிரியர்கள் மீது அவதூறு முழங்காவிலில் போராட்டம்

கிளிநொச்சி, ஏப். 3

**கிளிநொச்சி - முழங்காவில் ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கெதிராக சமூக வலைத்தளத்தில் பரப்பப்படும் அவதூறுக்கு எதிராகப் பாடசாலை சமூகத்தினரால் நேற்றுமுன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

பாடசாலையின் மீதும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மீதும் பாடசாலையின் வளர்ச்சி பிடிக்காத குழுவினரால் சமூக வலைத்தளத்தில் அவதூறு பரப்பப்பட்டுவருகின்றது.

இதனால் அதிபர், ஆசிரியர்கள் மனவுளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. வெளிமாவட்டங்களிலிருந்து வருகைதரும் ஆசிரியர்களும் பணிசெய்ய முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் ஆளுநர், வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை.

அதிபர், ஆசிரியர்கள் மீதான களங்கத்தை நீக்காவிடின் கற்றல் செயற்பாடுகளை முடக்கி மிகப்பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம்- என்றனர். (ச-சி,28)




ஆவதும் பேஸ்புக்காலே, அழிவதும் பேஸ்புக்காலே எண்ட நிலைமைதான் இப்ப. ஒவ்வொருத்தரும் தங்கட பிரச்சினையளைச் சொல்றதுக்கும், அதுகளைத் தீர்க்கிறதுக்கும் பேஸ்புக் மாதிரியான சமூகவலைத்தளங்கள் இப்ப ஒவ்வொருத்தருக்கும் உதவியா இருக்குது. ஆனால் இல்லாத பொல்லாத பிரச்சினையளைக் கொண்டுவாறதும் உந்தப் பேஸ்புக்தான். அதிலையும் பேக் ஐடியளை வைச்சுக்கொண்டு சிலர் செய்யிற அக்கிரமங்களுக்கும் அளவில்லாமல் போட்டுது.

ஊழல் ஒழிப்பு, மோசடி தவிர்ப்பு எண்டமாதிரி அடைமொழியளோட இப்பிடியான முகம் காட்டாத சில பேக் குரூப்புகளும் பேஸ்புக்கில இருக்கு. அவையின்ர தொழிலே ஆரையும் பற்றியாவது ஒவ்வொருநாளும் ஏதும் புறஞ்சொல்லிக் கொண்டிருக்கிறதுதான். அது சரியோ, பிழையோ எண்டெல்லாம் அவையும் பாக்கிறேலை. அதால கண்ணைமூடிக் கொண்டு ஆரைப்பற்றியும், என்னவும் போட்டுக்கொண்டே இருப்பினம். எங்கட சனத்துக்கும் அடுத்தவங்களின்ர அந்தரங்க விசயங்களை அறியிறதெண்டால் ஆவலாதிதானே. அதால அந்தப் பேஸ்புக் குரூப்பில போய், ஆரைப்பற்றி இண்டைக்கு போட்டிருக்கு எண்டு நோண்டிறதே பொழுதுபோக்காப்போட்டுது. ஆனால் பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்கெல்லோ சீவன்போகுது எண்ட கதையா, இவையின்ர பிழைப்புக்கும், பொழுதுபோக்குக்கும் அந்த பேஸ்புக்கில போடுற விசயங்களாலயும், படங்களாலையும் ஒரு பிழையுமே செய்யாத ஆக்களையும் குற்றவாளியள் மாதிரி எல்லாரும் பாக்கினம்.

கிளிநொச்சி முழங்காவிலில உள்ள பிரைமரி ஸ்கூலில உள்ள பிரின்சிப்பலை பற்றி முதலில நல்லமாதிரி ஒரு பதிவை அந்த பேஸ்புக்கில போட்டிச்சினம். பிறகு பார்த்தால் அதே பிரின்சிப்பல், ரீச்சர்மாரோட பிழையா நடக்கிறார் எண்டு இல்லாததும் பொல்லாததும் எழுதி, அங்க படிப்பிக்கிற ரீச்சர்மாரின் போட்டோக்களையும் போட்டு எல்லாரையும் அவையை பிழையாப் பாக்கிறமாதிரிச் செய்திருக்கினம். ஆனால் அந்தப் பிரின்சிப்பலோ, ரீச்சர்மாரோ அப்பிடியான ஆக்கள் இல்லை எண்டு அங்கையுள்ள எல்லாருக்குமே தெரியும். ஆனால் அடுத்தவன்ர வீட்டு விடுப்பறிய நினைக்கிற பேஸ்புக்குஞ்சுகளுக்கு இதொண்டும் தெரியாதே. அதால பள்ளிக்கூடப் பிரின்சிப்பலுக்கும் ரீச்சர்மாருக்கும் கடும் மனவுளைச்சலாப்போட்டுது.

இந்தநேரம், அதே பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிற ரீச்சர் ஒராளின்ர பேரில இன்னொரு பேக் ஐடியை திறந்து அதிலையும் இப்பிடி பிழையான பதிவுகளை உந்தக்கும்பல் போட்டிருக்கு. பிறகு ஒருநாள் பிரின்சிப்பலுக்கு ஒரு பொம்பிளை கோல் எடுத்திருக்கிறா. 'ஊழலை ஒழிக்கிற' பேஸ்புக்கை நடத்திற ஆக்களில தானும் ஒராள் எண்டும், அந்த பிரின்சிப்பலைப் பற்றி பிழையா வந்த பதிவுகளை 2 லட்சம் ரூபா தந்தால் அழிப்பம் எண்டும் அவா சொல்லியிருக்கிறா. ஊழலை ஒழிப்பம் எண்டிட்டு, ஒராளைப் பற்றி பிழையான பதிவைப் போட்டிட்டு பிறகு அதை நிப்பாட்டுறதுக்கு லட்சக்கணக்கில காசு வாங்கிறதுதான் பெரும் ஊழல். இதைப்பற்றி அந்தப் பிரின்சிப்பல் நடவடிக்கை எடுக்கச் சொல்லி முறைப்பாடு செய்யாத இடமில்லை. ஆனாலும் ஒண்டும் நடக்கேலையாம். ஏன் இப்பிடி எல்லாரும் நடவடிக்கை எடுக்கப் பயப்பிடுகினம் எண்டும் அந்த பிரின்சிப்பலுக்கும், பள்ளிக்கூடக்காரரும் விளங்கேலை. இப்பிடி பேஸ்புக்கில அவதூறு செய்யிறவையைக் கண்டுபிடிச்சு சட்டத்துக்கு முன்னால நிப்பாட்டோணும் எண்டு அந்தப் பள்ளிக்கூடத்தில படிக்கிற பிள்ளையளின்ர பெற்றோர் முந்தநாள் ஆர்ப்பாட்டமும் செய்திருக்கினம். இதுக்குப் பிறகாவது ஏதும் நடவடிக்கை எடுபடுகுதோ எண்டு பாப்பம்.

padsi@uthayan.com -பட்சி

வருடாந்தம்

## புற்றுநோய் பாதிப்பால் 19,000 பேர் இறப்பு!

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் வருடாந்தம் 33 ஆயிரம் புதிய புற்றுநோய் நோயாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 19 ஆயிரம் பேர் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுகாதாரத்துறை எதிர்கொள்ளும் முக்கிய சவாலாக புற்றுநோய்க்கான சிகிச்சை சேவைகள் உள்ளன.

புற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் அரசாங்கம் முன்னுரிமை அளித்துவருவதுடன், தேசிய மற்றும் சர்வதேச ஆதரவையும் பெற எதிர்பார்த்துள்ளது.

பெரும்பாலான புற்றுநோயாளர்கள் வாய் மற்றும் கழுத்துப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண்கள் என தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## வாக்காளர் அட்டைகள் ஏப்.16 முதல் விநியோகம்

கொழும்பு, ஏப். 3

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என அஞ்சல்மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஏப்ரல் 20 ஆம் திகதி சிறப்பு விநியோக நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## தனியார்துறை வேதனத்தை உயர்த்த சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஏப். 3

தனியார் துறை ஊழியர்களின் குறைந்த பட்ச மாதாந்த வேதனத்தை 27 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவதற்கான சட்டதிருத்தங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாகத் தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சரவைக்குப் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.பியதிஸ்ஸ தெரிவித்தார். (ச-இ)



# தேர்தல் விதிமீறல்கள் 413

கொழும்பு, ஏப். 3

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 413 முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 2 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 382 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 28 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றும் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெங்களூரை நேற்று வீழ்த்தியது குஜராத்!

**பெங்களூர், ஏப். 3**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரை அதன் சொந்த மண்ணில்வைத்துத் தோற்கடித்தது குஜராத்.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற குஜராத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பெங்களூரின் ஆரம்ப வீரர்களாக பில் ஷோல்ட் மற்றும் விராட் கோலி இருவரும் களமிறங்கினார்கள். முதலாவது பந்துப்பரிமாற்றத்தில் இருந்தே சிராஜின் வேகத்தில் எழுச்சி இருந்தது. பெங்களூரின் முன்வரிசை வீரர்களான ஷோல்ட் மற்றும் படிக்கல் இருவரையும் போல்ட் முறையில் வீழ்த்தினார் சிராஜ். கோலி 6, படிதார் 12 என பவிலியன் திரும்ப பெங்களூர் அணி பெரும் பின்னடைவை எதிர்கொண்டது. லிவிங்ஸ்டன் 54 ஓட்டங்களைப் பெற்றாலும், இதற்காக அவர் 40 பந்துகளை எதிர்கொண்டார். ரிம் டேவிட் 18 பந்துகளில் 32 ஓட்டங்களைப் பெற்றதே பெங்களூருக்கு ஒரே ஆறுதல். முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களை பெங்களூர் பெற்றது. சிராஜ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணிக்கு, அணித்தலைவர் கில் 14 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும் பட்லர், சாய் சுதர்சன் இருவரும் நம்பிக்கையான ஆட்டத்தை வழங்கினார்கள். 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சாய் சுதர்சன். பட்லர் அதிரடியாக விளையாடி 39 பந்துகளில் 73 ஓட்டங்களைக் குவித்தார். முடிவில் 13 பந்துகள் மீதமிருக்க 8 விக்கெட்டுக்களால் வென்றது குஜராத்.

(ம)




# பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.3

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம், மருத்துவர்மோகன்உள்ளகவிளையாட்டரங்கத் திறப்புவிழாவை முன்னிட்டு நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான மாபெரும் பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6மணியளவில் இளவாலையில் அமைந்துள்ள மருத்துவர் மோகன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. போட்டியின் பதிவுக்கான இறுதித்தினம் இன்று வியாழக்கிழமையாகும். பதிவுகளுக்கு 0768736255 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-41-66)

# தகரவேலியை தகர்த்த பெண்; பொலிஸில் முறைப்பாடு

*யாழ்ப்பாணம், ஏப். 3*

சுழிபுரம் பாறாளாய் வீதியிலுள்ள காளி கோவில் வளாகத்தின் எல்லைத் தகர வேலிகளைத் தகர்த் தெறிந்த பெண்ணுக்கு எதிராக கோயில் நிர்வாகத்தினரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம் கடந்த திங்கட்கி ழமை நடைபெற்றுள் ளது. சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் முறையிட்டபோதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

*( ச-25, 125)*


## யாழ்ப்பாணம் - மண்கும்பான்



திருவருள்மிகு மண்கும்பான்
வெள்ளைப்புற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
தேவஸ்தானம்
குரோதி வருட மஹோற்சவ
விஞ்ஞாபனம் - 2025



**03 ஆம் நாள் 03.04.2025 வியாழக்கிழமை சூரிய பிரபாவை காட்சி (இடப வாகனம்)**

ஆலய பிரதம குரு
சிவபூஜா துரந்தரர், ஸ்வரலயன்
சிவஸ்ரீ கிருஷ்ண ஜனேந்திரசிவாச்சாரியார்
(சிவாகம பீடம் - நல்லூர்)

மஹோற்சவ சிவாச்சாரியார்
அலங்கார சாதகமணி, சிவநெறிச் செம்மல்
சிவஸ்ரீ இ. ஜெயவிருபாட்ஷன் குருக்கள்
(இணுவில்)

மங்கல வாத்தியம்
குருநதன் குழுவினர்
(நாச்சிமார் கோவிலடி)

ஒலி, ஒளி அமைப்பு
கந்தஞானி வசந்தன் மனோன்மனி
(தம்பாட்டி)

சுவாமி அலங்காரம்
ந.கமலேஸ்வரன்
(உடுவில்)

**காலைத் திருவிழா**
- மு.ப. 7.30 மணி காலை சந்தி பூஜை
- மு.ப. 8.15 மணி கும்ப பூஜை
- மு.ப. 9.30 மணி மூலஸ்தான பூஜை
- மு.ப. 10.00 மணி ஸ்தம்பப் பூஜை
- மு.ப. 11.00 மணி வசந்தமண்டபப் பூஜை
- பி.ப. 12.30 மணி சண்டேசுவரர் பூஜை

**மாலைத் திருவிழா**
- பி.ப. 6.00 மணி சாயரட்சை பூஜை
- பி.ப. 6.30 மணி ஸ்தம்பப் பூஜை
- பி.ப. 7.30 மணி வசந்தமண்டபப் பூஜை
- பி.ப. 9.30 மணி சண்டேசுவரர் பூஜை

**குறிப்பு:**
அடியவர்கள் அபிஷேகத்திற்கு தேவையான பால், தயிர், இளநீர், பழவகை, பூ, பூமாலைகள் என்பவற்றை கொடுத்து விநாயகப் பெருமானின் அருள் ஆசியை பெறுவீர்களாக!
பதினைந்து தினங்களும் காலை, மாலை பூஜைகளைத் தொடர்ந்து மகேஸ்வரப் பூஜை (அன்னதானம்) இடம்பெறும்

திருவருள்மிகு மண்கும்பான் வெள்ளைப்புற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான
பரிபாலன சபை மற்றும் திருவிழா உபயகாரர்கள்

செ. சிவலிங்க குடும்பம்
மைதிலி நகைமாடம்
யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்



தங்கநகை வியாபாரி
என்றும் மங்கிடா தரம் குன்றிடாதங்க
நகைகளின்சாம்ராஜ்யம்



89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7902

79Z செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P: 011 239 6239

E - mail : maithilynagaimaadam89@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

ஒரு சிறந்த சிந்தனையின் ஒளியானது, பணத்தைவிட அதிக மதிப்பினை உடையது.

– தோமஸ் ஜெபர்சன்





## அத்துமீறலுக்கு விழுமா முற்றுப்புள்ளி?

இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைக்கான பயணத்தின்போது, அவருடன் பேச்சு நடத்தி தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார் கடற்றொழில் அமைச்சரான இராமலிங்கம் சந்திரசேகர். மோடியின் நலன்களோ அல்லது இந்தியாவின் நலன்களோ எமக்குப் பிரதானமல்ல, எமது மீனவர்களின் நலன்களுக்கே முதலிடம் என்றும் அமைச்சர் சந்திரசேகர் கூறியுள்ளார்.

தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி காரணமாக, அவர்களுக்கும் ஈழ மீனவர்களுக்கும் இடையில் நாளுக்குநாள் கடற்பதற்றம் அதிகரித்து வருகின்றது. இந்த நிலைமை, மேலும் மோசமடைந்து, மீனவர்களுக்கு இடையிலான உறவு 'ஜென்மத்துப் பகை' என்ற நிலைக்கு மாறுவதற்கு முன்னர், இந்தப் பிரச்சினைகளை விரைவாகவும் வினைத்திறனாகவும் தீர்க்கவேண்டியது அவசியமாகும். மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைகளைப் போக்குவதற்காக இதுவரை பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், அவை வெறும் சம்பிரதாயபூர்வமாகவும் கண்துடைப்பாகவும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினையை இல்லாமற் செய்யவேண்டும் என்ற ஆத்மார்த்தமான ஈடுபாடு எந்த அரசாங்கங்களுக்கும் இருந்ததாக வரலாறில்லை. ஒவ்வொரு வருடமும் அதிகரித்துவரும் அத்துமீறிய மீன்பிடி அதையே கட்டியம் செய்கின்றது.

எனவே, இதுவரைகாலமும் கடந்த அரசாங்கங்கள் முன்னெடுத்த பேச்சுவார்த்தையைப் போன்று அநுர அரசாங்கத்தின் பேச்சுவார்த்தையும் அமையக்கூடாது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமானதொரு முற்றுப்புள்ளியை வைத்துவிட்டு, வடக்கு மீனவர்களின் வாழ்வையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை அநுர அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். அதற்கு, பிரதமர் மோடியுடனான நேரடிப் பேச்சுவார்த்தையை ஆகச் சிறந்த சந்தர்ப்பமாக அநுர அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது இந்தியாவாக இருக்கலாம். ஆனால், வழங்கியது வழங்கியதுதான். தற்போது கச்சதீவு எனப்படுவது இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டுடனும், இறைமையுடனும் தொடர்புடைய விடயம். எனவே, கச்சதீவை மீட்டால் இந்தப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதாக தமிழகத்தில் தற்போது தோன்றியிருக்கும் 'அரசியற் குரல்கள்' அர்த்தமற்றவை. இந்தப் புரிதலையும், தெளிவையும் ஏற்படுத்தவேண்டியது தற்போது காலத்தேவையாகவே இருக்கின்றது.

## மீண்டும் எகிறும் முட்டை விலை



கொழும்பு, ஏப். 3
கோழிப்பண்ணை உரிமையாளர்களைப் பாதுகாக்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காவிட்டால் மீண்டும் ஒரு முட்டையின் விலை 70 ரூபாவுக்கு மேல் உயர்வதைத் தடுக்க இயலாது என்று கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் எச்.குணசேகர தெரிவித்துள்ளார்.
முட்டை உற்பத்தியாளர்களுக்கு வற்வரி செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் கோழிப்பண்ணைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.
அரிசி, காய்கறிகள் மற்றும் மீன்பிடித்தொழில் போன்ற விவசாயப் பொருள்களுக்கு வற்வரி விதிக்கப்படவில்லை. கோழிப்பண்ணைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அரசாங்கத்துக்கு வரி செலுத்துகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


## வாகன சேவைக்கு 'ரின்' எண் கட்டாயம்

கொழும்பு, ஏப். 3
மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து அனைத்துச் சேவைகளையும் பெறுவதற்கு வரி செலுத்துவோருக்கு அடையாள எண்ணான ரின் எண் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
புதிய வாகனங்களைப் பதிவு செய்வதற்கு இந்த ரின் எண் கட்டாயமாக்கப்பட்டுள்ள போதிலும் முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம் போன்றவற்றுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## சாமர சம்பத்தின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 3
நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்தை எதிர்வரும் 8 வரை தடுப்புக்காவலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.
2016 இல் ஊவா மாகாண சபையின் முதலமைச்சராக சாமர சம்பத் இருந்தபோது, மாணவர்களுக்கான உபகரணங்களை வழங்கும் திட்டத்துக்காக மாகாணசபைக்குச் சொந்தமான வங்கி நிதிகளைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டிலே சாமர சம்பத் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-சி)



## ஐ.தே.க.வின் பிரதித் தலைவராக அகிலவிராஜ்

கொழும்பு, ஏப். 3
முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம் ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவராக நியமனம் பெற்றுள்ளார். கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த நியமனத்தை அகிலவிராஜ்க்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தார். (ச-சி)

## வரிச்சலுகை

கொழும்பு, ஏப். 3
வருடாந்த வருமானம் ரூ.18 இலட்சத்துக்கும் குறைவாக வருமானம் பெறுபவர்களின் வைப்பு நிதிகளுக்கான வரி விகிதம் 10 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. உறுதிப்படுத்தும் ஆவணங்களை வங்கிக்குச் சமர்ப்பித்தே இந்த வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்ளமுடியும். இந்த மாற்றம் ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. (ச-சி)

## பனை, தென்னை தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத்திட்டம்

கொழும்பு, ஏப். 3
பனை, தென்னைத் தொழிலாளர்களுக்கான புதிய காப்பீட்டுத் திட்டமொன்று அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தக் காப்பீடு மரணம், முழுமையான ஊனம், தற்காலிக ஊனம் மற்றும் விபத்து ஏற்பட்டால் மருத்துவச் செலவுகளை உள்ளடக்கியுள்ளது.
இந்தத் திட்டத்தில் 5 இலட்சம் ரூபா தொடக்கம் 20 லட்சம் ரூபா வரையில் பனந்தொழிலாளர்கள் காப்பீடாகப் பெற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப் 3

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வடகிழக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயப் புனராவர்த்தன அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அதனையொட்டி இன்று வியாழக்கி ழமை காலைமுதல் பூர்வாங்கக் கிரியைகள் இடம்பெற்று நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிமுதல் சனிக்கிழமை மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்புச்சாத்துதல் இடம்பெறும்.

எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை பூசநட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய காலை 9.20 மணிமுதல் 10.20 மணிவரையுள்ள இடபலக்ன சுபமுகூர்த்த வேளையில் மனோன்மணி அம்பாளுக்கும் விநாயகர் முதலான பரிவாரமூர்த்திகளுக்கும் நவசக்தி இராஜகோபுரத்திற்கும் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ச-41)

### மீனவர்களை விடுவிக்காவிடின்

# நரேந்திரமோடிக்கு எதிராக கறுப்புக்கொடிப் போராட்டம்!

புதுடில்லி, ஏப். 3

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களை விடுதலை செய்ய இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக கறுப்புக்கொடிப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அகில இந்திய மீனவர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அகில இந்திய மீனவர் காங்கிரஸ் தேசிய தலைவர் தெரிவிக்கையில்,

ஏப்ரல் 4 ஆம் திகதி இலங்கை செல்லும் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மற்றும் புதுச்சேரி மாநில மீனவர்களை விடுதலை செய்யவும், கைப்பற்றப்பட்ட மீனவர்கள் படகுகளை நிபந்தனையின்றி விடுவிக்கவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை பிரதமர் மோடியும், மத்திய அரசும் நிறைவேற்றித் தராதபட்சத்தில், புதிய பாம்பன் பாலத்தைத் திறப்பதற்காக இராமேஸ்வரத்துக்கு ஏப்ரல் 6 ஆம் திகதி வருகைதரும் பிரதமர் நரேந்திர மோடியைக் கண்டித்து அகில இந்திய மீனவர் காங்கிரஸ் சார்பாக, மீனவர்களைத் திரட்டி கறுப்புக்கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்றார். (ச-இ)


## INVITATION FOR BIDS (IFB)
## URBAN COUNCIL, CHAVAKACHCHERI
## Council Fund -2025/01

1. The Chairman, Procurement Committee, on behalf of Chavakachcheri Urban Council now invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025.04.03 until 2025.04.22 from 09:00 hrs to 14:00 hrs.
4. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Section 5 of the Procurement document.
5. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.
   " Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in
   terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Chavakachcheri Urban Council, Chavakachcheri (T.P No: 021 227 0806, Fax No: 021 227 0079) during the period from 2025.04.03 until 2025.04.22 from 09:00 hrs to 14:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table. The method of payment will be by cash
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Procurement Committee, Chavakachcheri Urban Council, Chavakachcheri at or before 10.30 hrs, 2025.04.23 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Chavakachcheri Urban Council, Chavakachcheri commencing at 11.30 am on 2025.04.11
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | | From 2025.04.03 until 2025.04.22 | | | |
| | | Pre-Bid Conference | | | | At 11.30 A.M on 2025.04.11 | | | |
| | | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 2025.04.23 | | | |
| S No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security/Bank Draft/Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | | Security Amount | Validity Period | |
| 01 | NP/14/41(3)/2/ CF/02/2025 | Construction of Chavakachcheri Urban council office toilet & cycle park | 7.213 | 84 Days | C7& Above (Buildings) | 2000.00 | 73000.00 | 06-08-2025 | 77 Days |
| 02 | NP/14/41(3)/2/ CF/03/2025 | Construction of Chavakachcheri Urban council Town park toilet work-Nunavil | 7.530 | 84 Days | C7& Above (Buildings) | 2000.00 | 76000.00 | 06-08-2025 | 77 Days |
| 03 | NP/14/41(3)/2/ CF/04/2025 | Public Market internal development work in Chavakachcheri Town | 4.146 | 84 Days | C8& Above (Buildings) | 2000.00 | 42000.00 | 09-07-2025 | 49 Days |
| 04 | NP/14/41(3)/2/ CF/05/2025 | Fish market internal development work in Chavakachcheri Town | 4.322 | 84 Days | C8& Above (Buildings) | 2000.00 | 44000.00 | 09-07-2025 | 49 Days |
| 05 | NP/14/41(3)/2/ CF/06/2025 | Reconstrucion of Bus stand Nearer road ,Interlock work<br>Reconstruction of Perungulam Sangaththanai road,(Balance work)Sangaththanai 2nd lane (Balance work )Murugan Kovil Road,Sangaththanai | 6.091 | 84 Days | C7& Above (Road) | 2000.00 | 61000.00 | 06-08-2025 | 77 Days |
| 06 | NP/14/41(3)/2/ CF/07/2025 | Reconstruction of Kalvayal Nunavil Road Phase- I Reconstruction of Siththanmavadi Pillaiyar Kovil Road (Retar) and old School Road (repair) | 3.373 | 60 Days | C8& Above (Road) | 2000.00 | 34000.00 | 09-07-2025 | 49 Days |

Chairman,
Procurement Committee
Urban Council, Chavakachcheri.
2025.04.03
(CR/44/08) J-1


# மியான்மருக்கு இலங்கை நிதி

கொழும்பு, ஏப். 3

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மர் மக்களுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக வியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றபோதே அமைச்சரவை பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பௌத்த நாடுகள் எனும் வகையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பேணிவரும் நீண்டகாலத் தொடர்புகளைக் கருத்திற் கொண்டு, மியான்மர் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

அதேவேளை மருத்துவர்கள் மற்றும் ஏனைய சுகாதார சேவை ஊழியர்கள் அடங்கிய குழுவொன்றை எந்த வொரு சந்தர்ப்பத்திலும் மியான்மருக்கு அனுப்புவதற்குத் தயார் நிலையில் வைத்திருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி, ஏப். 3

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி செல்வா முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு முன்பள்ளி முன்றலில் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-25,9)

# 96 கிலோ கஞ்சா கடத்தல்: சங்குப்பிட்டியில் மூவர் கைது

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குபிட்டி பாலத்துக்கு அண்மித்த பகுதியில் வைத்து, மீன்கள் ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்படும் கூலர்ரக வாகனத்தில் கஞ்சாவைக் கடத்திச்சென்ற மூவர் சாவகச்சேரி பொலிஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் வழிகாட்டலில், விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் பொலிஸ் உப பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

இதன்போது 96 கிலோ 310 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் வவுனியாவை சேர்ந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மூவரையும் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர்களை தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மோடியின் இலங்கை வருகையின்போது

# மீனவர்கள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்

**யாழ்ப்பாணம், ஏப். 3**

**இந்தியப் பிரதமரின் இலங்கைக்கான வருகையின் போது புரையோடிப் போயிருக்கின்ற இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுந்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையில் சுமுகமான நல்லெண்ண அடிப்படையிலான ஒரு கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

எதிர்வரும் நாள்களில் இலங்கைக்கு இந்தியப் பிரதமர் விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதன் போது நீண்டகாலமாக புரையோடிப்போய் இருக்கின்ற இந்திய - இலங்கைமீனவர்பிரச்சினையைத் தீர்த்து எமது தொப்புள்கொடி உறவுகளுடன் இணைந்து வாழ வழி வகுக்க வேண்டும்.

அதேவேளை நெடுந்தீவு முதல் அனலைதீவு வரையான தீவகப்பிரதேசங்களின் அடிப்படை அபிவிருத்தி தொடர்பிலும் மோடி கரிசனைகொள்ளவேண்டும்.

தீவகப் பிரதேசங்களில் குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு அனலைதீவு உள்ளிட்ட தீவக மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். நாளாந்தம் கடற்பயணங்களை சவாலுடன் மேற்கொண்டு தமது தேவைகளை மக்கள் பூர்த்திசெய்கின்றனர்.

எனவே தீவக மக்களின் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி முன்வர வேண்டும் - என்றார். (ச- 125)



## தேர்தல் கடமைகள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 3

தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில், மாவட்டச் செயலர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது, உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பான வட்டாரங்களின் வாக்களிப்பு நிலையங்கள், வாக்கெண்ணுதல் முறைமைகள் போன்றவை தொடர்பாகவும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது. (ச-25,66,27)

## மன்னார் சிப்பியாறுக்கு பஸ்சேவையின்றி அவதி

மன்னார், ஏப். 3

மன்னார் ஏ-32 வீதியிலுள்ள சிப்பியாறுப் பகுதிக்கு பேருந்துகள் அதிகளவில் இயக்கப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சிப்பியாறு புனித ஸ்தலத்துக்கு பிரதி செவ்வாய்க்கிழமைகளில் பல மாவட்டங்களிலிருந்து அதிகளவான பக்தர்கள் சென்று வருகின்றனர்.

குறித்த வழித்தடத்தில் பேருந்து சேவைகள் மேலதிகமாக ஏற்படுத்தப்படாமையால் பூநகரிக்கு அப்பாலுள்ள பாடசாலைகள், அலுவலகங்களுக்கு தினமும் சென்று வரும் உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். மிதிபலகைவரை பயணிகள் பேருந்துகளில் ஏற்றப்படுகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி குறித்த வழித்தடத்தில் மேலதிக பேருந்து சேவையை ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-159)

### கட்டுப்பாட்டு விலையை மீறி

## அரிசி விற்பனை

யாழ்ப்பாணம், ஏப்.3

அரசாங்கம் அரிசிக்கு விதித்த கட்டுப்பாட்டு விலையை மீறி யாழ். மாவட்டத்தில் அநேகமான வர்த்தக நிலையங்களில் அரிசி விற்பனை இடம்பெறுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

பத்துக்கிலோ நாட்டரிசிப் பை 2900 ரூபா முதல் 3000 ரூபா வரைக்கும் விற்கப்படுகின்றது.

சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் அரிசியின் விலையை வர்த்தகர்கள் அதிகரித்து விற்பதால் நுகர்வோர் நெருக்கடியைச் சந்தித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-41-17)

## ஒளிபாய்ச்சி மீன்பிடித்தவர் கட்டைக்காட்டில் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட படகுடன் ஒருவர் நேற்று கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதன்போதே சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடித்த படகுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் சட்டநடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-27)

## வலிமையான மற்றும் கண்களை கவரும் மெல்லிய வடிவத்திலான நவீன Inifnix HOT 50Pro + கைபேசிகள் இப்போது இலங்கையில்

இலங்கையின் முன்னணி ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி பிராண்டான இன்பினிக்ஸ் (Inifnix) தனது புதிய Hot 50Pro + ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியை விற்பனைச் சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இந்த Ultra Silm ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி 6.88mm பருமனுடன் 3D Curved SilmEdge வடிவமைப்புடன், கைக்கு அடக்கமாக எளிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. Inifnix Hot 50Pro ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியை நாடு முழுவதும் Inifnix காட்சியறைகளில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை பிரதிநிதிகள் மற்றும் BuyAbans.com ஊடாக ஆன்லைன் தளத்தில் ரூ.69,999/ =க்கு கொள்வனவு செய்திட முடியும்.




Hot 50Pro ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி கவர்ச்சியான தோற்றத்துடனும் வலுவான கட்டமைப்புடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. Social Media மற்றும் Streamign உள்ளடக்கங்களை இதன்மூலம் மிகவும் சுலபமாக செயல்படுத்த முடியும். 162g என்ற மிகச்சிறிய எடையுடன் 3D Curved AMOLED Display வண்ணமயமான திரையை இது வழங்குகிறது. Conrign Gorilla Glass உடன் 2X Scratch Resistnace பாதுகாப்பும், IP54 தரச் சான்றுடன் தூசி மற்றும் மழைத் தூரல்களில் இருந்து இது பாதுகாக்கப்படுகிறது.

AI தொழில்நுட்பம் கொண்டு இயங்கும் Hot 50Pro ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துபவர்களின் கலைநயத்தையும், திறமையையும் மேம்படுத்தும் வகையில் AI Eraser, AI Cutout, AI Vioce Capture போன்ற சிறப்பியல்புகளை கொண்டுள்ளது.

Inifnix Sir Lanka இன் உள்நாட்டுக்கான பிரதானி ஆராய mmad Shahzeb Ather இதனைப் பற்றி கூறுகையில், Hot 50Pro என்பது அழகிய வடிவமைப்பு மற்றும் நீண்ட ஆயுளை கொண்ட ஒரு ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி என்பதனை குறிப்பிட்டார். மேலும், இது யதார்த்த உலகத் தேவைகளுக்கு ஏற்றதாக உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

Hot 50Pro உங்கள் அன்றாட வாழ்க்கைக்கான பயன்பாட்டுத் தேவைகளை எளிதாக்குகிறது. 6.88mm Ultra Silm வடிவமைப்பைக் கொண்டுள்ள இந்த கைபேசி எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. Conrign Gorilla Glass தொழில்நுட்பத்தால் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது. நாளாந்த உங்கள் முக்கிய தருணங்களை படம் எடுப்பதற்கும், HighDeifnition Content ஸ்ட்ரீம் செய்யவும், உங்கள் அன்பானவர்களுடன் மற்றும் உறவினர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் இது மிகவும் உறுதுணையாக அமைகிறது.

**Inifnix விற்பனை நாமம்:**

2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. Inifnix ஸ்மார்ட் மொபைல் சந்தையில் முன்னணி விற்பனை நாமமாக திகழ்கிறது. Generation Z வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்டு, மேம்பட்ட தொழில்நுட்பம், சக்திவாய்ந்த செயற்பாடு, அழகான வடிவமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதிய தயாரிப்புகளை அறிமுகம் செய்து வருவதோடு, Inifnix எதிர்காலத்திற்கேற்ப சிறந்த தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து வருகிறது.

"THE FUTURE IS NOW" என்ற தலைப்பின் கீழ், ஐகெளைை இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் நோக்கில் செயற்பட்டு வருகிறது.

தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆப்ரிக்கா உள்ளிட்ட 40 க்கும் மேற்பட்ட நாடுகளில் Inifnix பிராண்ட் பரவி உள்ளது. 2018-2020 காலப்பகுதியில் 160வீதம் வளர்ச்சியை தொட்டுள்ளதோடு, உலகின் முன்னணி மொபைல் பிராண்டுகளில் ஒன்றாக Inifnix உருவாகியுள்ளது.

மேலும் தகவல்களுக்கு https://lk.ifninixmobility.com/ இணையதளத்திற்குச் பிரவேசிக்கவும், Inifnix Sir Lanka தொடர்பான அனைத்து புதுத் தகவல்களுக்கும் https://www.facebook.com/InifnixMobileSrilanka/ (Facebook) மற்றும் https://www.isntagram.com/ifninixmobilelk/ (Instagram) பக்கங்களைப் பின்தொடரவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீ வீர கத்தி விநாயகர் திருக்கோவில் வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் நாளை வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம் பமாகவுள்ளது.

தொடர்ந்து மஹோற் சவ உற்சவங்கள் காலை 7 மணிக்கும் மாலை 6 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெ றும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி சகோபுர உற்ச வமும் மறுநாள் 14 ஆம் திகதி புதுவருட தினத்தன்று காலை 10 மணிக்கு இர தோற்சவமும் 15 திகதி தீர்த்தோற்சவ மும் மறுநாள் பிராயச் சித்த அபிஷேகமும் மாலை வைரவர் பொங்கலும் இடம் பெறவுள்ளதாக ஆல யப் பரிபாலனசபை யினர் தெரிவித்துள் ளனர். (ச–28)

## வேலையாள் தேவை

தோட்ட வேலை செய்வதற்கு ஆள் தேவை
45 - 50 வயதிற்குட்பட்டவர் தங்கி நின்று வேலை செய்வதற்கு விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

077 977 3286

## வேலையாள் தேவை

யாழ்நகரில் வீட்டு வேலைசெய்வதற்கு அனுபவமுள்ள பெண் உதவியாளர் தேவை.
வேலை நேரம் :
காலை 7.00 - மாலை 4.00 மணிவரை
நாள் சம்பளம் 1000/-

தொடர்பு:- 076 664 4228

(CS57897) N-1

## வேலையாட்கள் தேவை

**யாழ். பிரதான வீதியில் அமைந்திருக்கும் பிரபல வெதுப்பகம் ஒன்றிற்கு பின்வரும் பணிகளுக்கு வேலையாட்கள் தேவை.**

- Juice and Milk Shake தயாரிப்பாளர் (இருபாலாரும்) அனுபவம் கட்டாயம்.
- உணவு பரிமாறுபவர் (பெண்கள்)
- பாண் மற்றும் பணிஸ் உற்பத்தி செய்பவர் (ஆண்)

அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. அல்லது பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு.

077 350 0605, 076 534 3034

(CS/57898) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 05 . 1953



இறப்பு 30 . 03 . 2025

### சரவணமுத்து நாகேஸ்வரி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், திரு வீதி - உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து நாகேஸ்வரி அவர்கள் கடந்த 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பூரணம் தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுச்சாமி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், யோகநாதன், குகனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரவணமுத்து (தனியார் பஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், லக்ஷிபிரபா (ஆசிரியர் - யா/ வயாவிளான் மத்திய கல்லூரி), சத்தியப்பிரபா (ஜேர்மனி), மயூரன் (Dotline Photo Lap), அஜீத்குமார் (தனியார் பஸ் உரிமையாளர், வசாவிளான் - யாழ்ப்பாணம் வழித்தடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதர்சன், புவிகரன் (ஜேர்மனி), கீர்த்திகா, திவாஜினி (ஆசிரியர் - மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கவிதயா, சிபிவிஸ்ணு, அக்ஷிதா, மகதி, அக்ஷனா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் உரும்பிராயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**


திரு வீதி,
உரும்பிராய் வடக்கு.

அஜீத்குமார் (மகன்) - 076 637 0455
சரவணமுத்து (கணவர்) - 077 489 7278

(CS/57900) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 11 . 1938



மறைவு 29 . 03 . 2025

### செல்லத்துரை அருளையா

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அருளையா அவர்கள் கடந்த 29.03.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பூரணம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - திரேசம்மா தம்பதியரின் மருமகனும், றெஜினா றூபியின் அன்புக் கணவரும், ஜஸ்லின் (கனடா), விஜி (கனடா), வதனா (கனடா), ஜொய்லின், சாம்சன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வா (கனடா), வேந்தன் (கனடா), றெஜி (கனடா), றஞ்சித், கிறிஸ்ரீனா (கனடா), ஆகியோரின் மாமனாரும், றெய்ஸ்மன் (கனடா), றூபினோ (கனடா), றிஸ்லி (கனடா), மிதுர்சிகா (கனடா), டினுர்சிகா (கனடா), அப்ரியன் (கனடா), ஸ்ரெபியா (கனடா), ஷெப்றினா (கனடா), இவாலின், இசானா, எஸ்ரில்லா (கனடா), எல்சா (கனடா), ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 32, ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

யாழ்ப்பாணம்,
சுண்டிக்குளி.

சாம்சன் - 647 672 9941
074 127 6731
செல்வா - 416 881 979
வேந்தன் - 647 298 6418
றெஜி - 647 229 70702
றஞ்சித் - 077 3242 145

(எ.44616) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1945



மறைவு 02 . 04 . 2025

### சிவக்கொழுந்து சுப்பிரமணியம்

(தாவடி ஸ்ரீ அம்பலவாணர் கந்தசுவாமி கோவில் - அறங்காவலரும், தலைவரும்)

தாவடி தெற்கு, பத்தானை வீதியைப் பிறப்பிடமாகவும், பிடாரி அம்மன் கோவிலடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சுப்பிரமணியம் நேற்று (02.04.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தவமணி (பேபி) அவர்களின் அன்புக் கணவரும், தபோசன் (அகிலன்), பகீரதன் (முரளி - பிரான்ஸ்), பிரதீபன், தர்சினி ஆகியோரின் தந்தையும், சத்தியரூபன், தர்சினி, சரளா, தர்மினி ஆகியோரின் மாமனாரும், வர்ஷன், அகவன், பர்ஷனா, சபிசனா, சஸ்விகன், சஸ்மிதா, விஸ்னுஜன், மிதுனுஜன், சஞ்சனா, சகிசனா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிடாரி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
077 178 7502

(CS 57899) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமரக்கன்று வழங்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். ஊரெழு கணேச வித்தியாசாலையில் கற்கும் சகல மாணவர்களுக்கும் இலவச பழமரக்கன்று வழங்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் பாடசாலையின் பழைய மாணவர் நடேச பிள்ளை சுந்தரேஸ்வரனின் நிதி அனுசரணையில், இந்த மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. (ச-25)

## 8 ஆண்டுகளுக்கு...

உலக வங்கியின் நிபுணத்துவக் குழுவுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது போரால் வடக்கு மாகாணம் கடந்த மூன்று தசாப்தங்களாகப் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டிய வடக்கு ஆளுநர் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தொழிற்சாலைகள் வடக்கில் மூடப்பட்டுள்ளமையால் இளையோர் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர் எனத் தெரிவித்த ஆளுநர், விவசாயம் மற்றும் மீன்பிடி வடக்கின் முக்கியமான துறைகளாகவுள்ள நிலையில் உற்பத்திப் பொருட்களைப் பெறுமதி சேர் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் அதிகளவானோருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க முடியுமெனவும் சுட்டிக்காட்டினார்.

அதற்கு நிபுணத்துவக் குழுவினர் சாதகமான பதிலை வழங்கினார்கள். சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளதாக சுட்டிக்காட்டினர். (அ-ச-66)

## மாவிட்டபுரம்...

மகா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 4.32 மணியளவில் ஆரம்பமாகவுள்ளன. எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரையான நான்கு தினங்களுக்கு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவைச் சிறப்பிக்கும் முகமாக இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்திலிருந்து மாவிட்டபுரம் கந்தப் பெருமான் ஆலயத்திற்கு எழுந்தருளவுள்ளார். (அ-ம-66)




## பிரிட்டனின்...

இடம்பெற்றது. இதன்போது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர், போர்க்குற்றங்களைப் புரிந்தனர் என்ற குற்றச்சாட்டில், முன்னாள் இராணுவத் தளபதிகளான சவேந்திர சில்வா மற்றும் ஜகத் ஜெயசூரிய, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்துசென்ற கருணா என்னும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு எதிராக பிரிட்டனால் தடைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடைகளுக்கு எதிராக ஓர் அரசாங்கமாக எமது நிலைப்பாட்டை நாங்கள் பதிவுசெய்துள்ளோம். அதற்கு மேலதிகமாக விசேட குழுவொன்றை அமைத்து இந்த விடயத்தைக் கையாள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு, நீதியமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றை உள்ளடக்கிய வகையிலேயே இந்தக் குழு அமைக்கப்படவுள்ளது.

குறித்த குழுவின் பணிகளுக்கு தேவையெனக் கருதுகின்ற விடயம் தொடர்பான நிபுணத்துவத்து உதவிகளைப் பெறுவதற்காக, வேறு அதிகாரிகளின் அல்லது நிபுணர்களின் சேவைகளைப் பெறவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர ஆகியோர் அந்தக் குழுவில் இடம்பெறுவார்கள்'- என்றார். (அ-ம-44)

## தென்னக்கோனுக்கு...

கள் பற்றிய குழுவில் இதுதொடர்பில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அத்துடன், நாடாளுமன்றத்தை எதிர்வரும் ஏப்ரல் 8ஆம், 9ஆம் மற்றும் 10ஆம் ஆகிய திகதிகளில் கூட்டுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய 8ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு பதில் பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை நாடாளுமன்றத்தல் சமர்ப்பிக்கப்படும்.

ஏப்ரல் 10ஆம் திகதி முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரையில், கடந்த 14ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 'பட்டலந்த வதைமுகாம் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை' மீதான விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைகளைத் தேர்வுசெய்து கிராமங்களை உயர்த்துங்கள்!

## அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பு தெரிவிப்பு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கட்சிகளைத் தாண்டி ஆளுமையுள்ளவர்களை வடக்கு – கிழக்கு மக்கள் தெரிவுசெய்யவேண்டும் என்று அடக்குமுறைக்கு எதிரானஜனநாயகஅமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தம்பிராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்மக்கள் தீர்க்கமான ஒரு முடிவை எட்டவேண்டும்.

'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் என்ற போர்வையில் இராணுவமயமாக்கலை இந்த அரசாங்கம் மறைமுகமாக முன்னெடுக்கின்றது. யாழ்.மாவட்டத்தில் நுளம்புப்பெருக்கம், முறையற்ற கழிவகற்றல் முகாமை எனப் பல விடயங்கள் உள்ளன. எனவே கிராமங்களில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி வளர்ச்சியை எட்ட ஆளுமையுள்ளவர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பவேண்டும் – என்றார். (ச–125)


## வேலையாட்கள் தேவை

கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துநர்

தொடர்பு:- 076 440 8953

(CS/2879) J-1

SRP CONSTRUCTION

## SRP Construction

- ✓ புதிய வீடுகள்/ கடைகள் அமைத்தல்
- ✓ பழைய வீடுகள் புனரமைத்தல்
- ✓ மாபிள் வேலை
- ✓ வர்ணப்பூச்சு வேலைகள்
- ✓ தச்சுவேலைகள்
- ✓ கண்காணிப்பு கமரா, சோலர் அமைப்புக்கள் அமைத்தல்
- ✓ மின்சாரம் மற்றும் பைப் இணைப்பு வேலைகள்

அனைத்து வேலைகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் அழகாகவும் நேர்த்தியாகவும் செய்து தரப்படும்.

T.P: 0777 40 96 72


## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 05 . 1932



மறைவு 01 . 04 . 2025

### திருமதி கணபதிப்பிள்ளை மகேஸ்வரி

பெரியமாவடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியாலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை மகேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (01.04.2025) செவ்வாய்க்கிழமை கனடா மொன்றியாலில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா, இந்திராதேவி, வசந்தாதேவி, இராசேந்திரன் (சோதி), மகேந்திரன் (சிறி), சிவனேந்திரன் (பாபு) மற்றும் இராதாதேவி, தெய்வேந்திரன் (அப்பன் - லண்டன்), செல்வேந்திரன் (செல்வன் - கனடா), இரவீந்திரன் (ரவி - ஓய்வுநிலை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தேர்தல்கள் அலுவலகம் யாழ்ப்பாணம்), குலேந்திரன் (ரஞ்சன் - பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமராசா (சின்னத்தம்பி - கட்டட ஒப்பந்ததாரர்), சபாநாதன் (ஓய்வு நிலை கிராம அலுவலகம்), சுரேந்திரன் (மின்மானி வாசிப்பாளர் - மின்சாரசபை), ரஞ்சினி (லண்டன்), மஞ்சுளா (கனடா), ஜெயரூபி, சுரேஸ்குமாரி, தவம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மார்க்கண்டு, கமலேஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் புதவுடல் எதிர்வரும் (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை கனடா மொன்றியாலில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் அன்றயதினம் நடைபெறும். மேலும் பெரிய மாவடி சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் துயர் பகிர்வு நடைபெறும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அப்பன் (லண்டன்) - 0044 759 155 2309
செல்வன் (கனடா) - 001 514 553 0818
ராதா - 074 252 0008
ரவி - 077 661 3864
ரஞ்சன் - 071 442 1072

(CS/2877) J-1

தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 07 1943



மறைவு 02 04 2025

### பத்மநாதன் அன்னப்பிள்ளை

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை அன்னம்மாள் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (02.04.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான நாகமணி - இளையாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், அமரர்களான மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பத்மநாதன் (அமரர்) அவர்களின் அன்பு மனைவியும் மகேஸ்வரி (கனடா), கமலேஸ்வரி (துபால்திபர் - காரைநகர்), பத்மேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜய்குமார் (கனடா), சச்சிதானந்தசிவம் (முன்னைநாள் தபால் ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந்தினி, நிரோசன், கஜேந்திரன், வைஸ்ணவி ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், அருணாசலம் (அமரர்), நாகரத்தினம், இராசமணி, சபாரட்ணம் (அமரர்-முன்னைநாள் பொது முகாமையாளர், பலநோக்கு கூ.சங்கம்), முத்துப்பிள்ளை (ஓய்வுநிலை தபாலதிபர் - மானிப்பாய்), நவமணி (ஜேர்மனி), கடம்பமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 244 6696

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 18 . 11 . 1939



ஆண்டவன் அடியில் 02 . 04 . 2025

### திருமதி இராசநாயகம் பரமேஸ்வரி

உடுப்பிட்டி கும்பவழியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (02.04.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலும்மயிலும் - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தங்கமுத்து தம்பதியிளரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசநாயகம் (துர்க்கா மரக்காலை - சண்டிலிப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும், இராசலிங்கம் (உரிமையாளர் - துர்க்கா மரக்காலை) அவர்களின் அன்புத் தாயும், சாந்தரூபியின் அன்பு மாமியாரும், வைஷ்ணவி, சிறிரமணன் மற்றும் நிதுஷாந்த், டினுசியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்கராவின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, தங்கவேலாயுதம், சிவபாதசுந்தரம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் (கலாஜோதி புத்தகசாலை), Dr. செல்வநாயகம் (கருணா கிளினிக்), மற்றும் அரியநாயகம் (ஆதுரா கிளினிக் - மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மீசாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.30 மணியளவில் சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சசி மில் லேன்,
சண்டிலிப்பாய்.

(CR/44740) J-1

தகவல் : குடும்பத்தினர்
மகன் - 077 711 4852

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** தந்தை வழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. அலுவலகத்தில் முக்கிய பொறுப்பு ஒன்றுக்கு உங்கள் பெயரை பரிந்துரைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிரிகளால் மறைமுகத்தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கை தேவை. கணவன் மனைவிக்கிடையே இருந்தகருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. எதிர்பாராத செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மாலையில் வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம்.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்புக் கரையும். தாய் வழி உறவுகளால் காரிய அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மகரம்:** சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள். நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**கும்பம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணை வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் தேவை அறிந்து மற்றவர்கள் உதவிசெய்வார்கள். குடும்பத்தில் மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

## இலங்கை...

தமிழக முதல்வர் ஸ்டாலினால் கொண்டுவரப்பட்ட தனிநபர் தீர்மானம், எந்த வாக்கெடுப்பும் இல்லாமல் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை, இந்திய மத்திய அரசாங்கத்துக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சுக்கும் அனுப்பிவைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் மோடி, நாளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இவ்வாறான பின்னணியிலேயே, தமிழக சட்டப் பேரவையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் இருந்து எதிர்வரும் ஆறாம் திகதி புறப்படும் பிரதமர் மோடி, புதுடெல்லிக்குச் செல்லாமல் நேரடியாகத் தமிழகத்துக்கே செல்கின்றார். அங்கும் மீனவர்களின் விவகாரம் உள்ளிட்ட பல்துறை விடயங்கள் தொடர்பில் அவர் கலந்துரையாடல் நடத்தவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## மோடியின்...

களைக் கவனிப்பதற்காக சிறப்புக் குழுவொன்று நேற்றுமுன்தினம் கொழும்பை வந்தடைந்துள்ளது. கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் அந்தக் குழுவினர் இலங்கையின் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

பிரதமர் மோடியுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர்கள், மூத்த அதிகாரிகள் ஆகியோரும் வருகைதரவுள்ளனர். (அ-ம-இ)

## இந்தியாவுடன்...

ஊடக மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி இலங்கை வருகின்றார். 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஏப்ரல் 5ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் பிரதமர் மோடிக்கு வரவேற்பளிக்கப்படவுள்ளது. அதன்பின்னர், ஜனாதிபதி அநுரகுமாரவுடன் இரு தரப்பு சந்திப்பு நடைபெறும். இரு தரப்பு சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதியும், இந்தியப் பிரதமரும் ஊடக சந்திப்பை நடத்துவார்கள். சம்பூர் சூரியசக்தித் திட்டம் கொழும்பில் இருந்து திறந்து வைக்கப்படும்.

ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி அநுராதபுரத்தில் ஸ்ரீமகாபோதியில் பிரதமர் மோடி வழிபாட்டில் ஈடுபடுவார். தண்டவாளத் திறப்பு விழாவும் நடைபெறும். வலு சக்தி, சுகாதாரம், டிஜிட்டல் பொருளாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட இரு தரப்பு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன' என்றார்.

இந்தப் பயணத்தின்போது, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம், மாகாணசபைத் தேர்தல், அத்துமீறிய மீன்பிடி, கடல்சார் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி ஆகிய துறைகளில் இருநாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ-ம-44)

## வேட்புமனுக்...

பட்ட மனுவொன்று, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. சமர்ப்பணங்களைக் கேட்டறிந்த நீதிபதிகளான மொஹமட் லாபர் தாஹிர் மற்றும் கே.பி. பெர்னாண்டோ, ஒருவருடைய பிறப்பின்போது மருத்துவமனையில் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழை ஆதாரமாக ஏற்க மறுத்திருந்தால், அவற்றை உரிய ஆதாரமாக ஏற்றுக்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது.

தென்னிலங்கையில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனு ஒன்று தொடர்பிலேயே இந்த வழிகாட்டலை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இதர மனுக்கள் மீதான விசாரணை இன்று இடம்பெறவுள்ளது. இந்த மனுக்கள் மீதான தீர்ப்பு நாளை வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## வயிற்றோட்டம்...

டன் அனுப்பிவைக்கப்பட்ட நிலையில், தாயார் இடையிடையே மருத்துவமனைக்குச் சென்று ஆண் சிசுவைப் பராமரித்து வருகின்றார். இந்த நிலையில், வீட்டிலிருந்த பெண் சிசுவுக்கு நேற்றுப் பால்கொடுத்த பின்னர், அந்தக் குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து சில மணிநேரத்தில் அந்தக் குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## யாழ்.மாவட்டச்...

யில் அதிகளவான மாவட்டங்களைக் கொண்டுள்ள வடமாகாணத்தில், தற்போது வவுனியா மாவட்டத்தில் மட்டுமே குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு விடயம்சார் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வவுனியா பிராந்திய அலுவலகத்துக்கே பயணம் செய்ய வேண்டிய நிலை உள்ளது.

வடமாகாண மக்கள் அதிகளவில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளமையால், அவர்களுக்கான துரிதசேவைகளை வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிப்பது பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 31ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைய, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வளாகத்தில் இந்த மாதத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-26-44-66)

## 50 இல்...

தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஓட்டிசம் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மருத்துவ நிபுணர் ஆசிரி ஹேமமாலா மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஓட்டிசம் தொடர்பான ஆய்வுகள் எதுவும் சமீபகாலமாக மேற்கொள்ளப்படவில்லை. எனினும், நாளாந்தம் சிகிச்சைக்காக வருகைத் தருபவர்களை அவதானிக்கும் போது 50 சிறுவர்களில் ஒருவர் ஓட்டிசம் நிலையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று கருதப்படுகின்றது.

குழந்தையின் மூளை நரம்புகளில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடு ஓட்டிசம் நிலை எனப்படுகிறது. நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சைகளை தொடர்ச்சியாக பெறும் பட்சத்தில் ஓட்டிசம் நிலையால் பாதிப்புக்குள்ளாகிய சிறுவர்களின் மூளை நரம்புகளின் வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும். அவர்களும் சாதாரண சிறுவர்கள் போல கற்றல் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபட உரிமை உண்டு. உலகளாவிய ரீதியில் தற்போது ஓட்டிசம் உள்ளிட்ட நரம்பியல் குறைபாடு நோய்களால் பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. இலங்கையில் 2009ஆம் ஆண்டு 8 மாத குழந்தைகளிடை யே மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் போது 93 குழந்தைகளில் ஒருவருக்கு ஓட்டிசம் குறைபாடுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு உலகளாவிய ரீதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தரவுகளின் அடிப்படையில் 36 குழந்தைகளில் ஒருவருக்கு ஓட்டிசம் உள்ளதாக தெரியவந்துள்ளது. முறையான சிகிச்சைமூலம் இந்த நோய் நிலையை முற்றாக நிவர்த்தி செய்யமுடியும்-என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 42 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
  - ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17,000,00)
  - ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15,000,00)
  - ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8,000,00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

**(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)**

தொடர்பு: 076 935 3971 / 076 987 8617 / 076 860 2770



## வீடு காணி விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளியில் 1.5 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு.
- 4 அறைகள்
- நான்கு புறமும் சுற்று மதில்
- 1st மாடிக்கு மேல் தளமும் படிகட்டுகளும் போடப்பட்டுள்ளது.

தொடர்பு: **070 686 7688**

(CS 2882) A


# 200 ரூபாவுக்கு போசாக்கு உணவு

*அரசாங்கம் புதிய திட்டம்*

கொழும்பு, ஏப். 3

மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் குறைந்த விலையில் போசாக்கான உணவைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் அரசாங்கத்தால் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் 'பெலெஸ்ஸ' உணவகத்தில் இந்தத் திட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. தேசிய உணவு ஊக்குவிப்புச்சபை, சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியன இணைந்து வர்த்தகர்களின் ஆதரவுடன் நடத்திவரும் இந்த உணவகத் திட்டம் 'கிளீன் சிறீங்கா' திட்டத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதனால் 200 ரூபாவுக்கு குறைந்த விலையில் போசாக்கு நிறைந்த உணவை உண்ணும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கும். இந்தப்போசாக்கான சமச்சீர் உணவின் செய்முறை அனைத்து அரச மற்றும் தனியார் உணவகங்களிலும் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (ச-சி)

# முன்னாள் முதலமைச்சருக்கு கடூழியச் சிறைத்தண்டனை!

கொழும்பு, ஏப். 3

வடமத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளர் சாந்தி சந்திரசேன ஆகியோருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் தலா 16 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

வடமத்திய மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் சட்டவிரோதமான முறையில் எரிபொருள் கொடுப்பனவாக 20 இலட்சத்து 80ஆயிரத்து 500 ரூபா பெற்றமை தொடர்பில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)


# உடனடி வேலைவாய்ப்பு

**யாழ். கொக்குவிலில் ஆரம்பிக்க உள்ள வியாபார நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.**

- Photo Copy தமிழ், ஆங்கிலம் Typing செய்யக்கூடியவர்கள். A/L வர்த்தக துறையில் கற்றவர்களுக்கு முன்னுரிமை. (ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது)
- மோட்டார் சைக்கிள் திருத்துபவர்கள். (தங்கிநின்று வேலைசெய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
- வாகன ரிங்கர் (Tinker), பெயின்ட்ரர் (Painter)
- வாகன சாரதி AD வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள். (தங்கிநின்று வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

தொடர்பு:- 070 288 9296




# 'திருப்பாடுகளின் நாடகம்' வியாழனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.3

**திருமறைக்கலாமன்றத்தின் மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு 'வெள்ளியில் ஞாயிறு' எனும் பெயரில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.**

திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரின் எழுத்துரு, நெறியாள்கையில் தயாராகும் 'வெள்ளியில் ஞாயிறு' துயரமும் சிலுவைகளும் இல்லாது வெற்றியும் மகிழ்ச்சியும் இல்லை, நல்லனவற்றுக்கான மானிடத்தின்துயரங்களும்பிரயத்தனங்களும்தான் வெற்றியைத்தருகின்றன என்ற கருப்பொருளினை மையமாகக் கொண்டுள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் 'வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகளின் நாடகம் முதன்முதலாக 2010 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2018 ஆண்டிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-33)


## பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை

- 19 - 45 வயதுடைய. பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய தேக ஆரோக்கியமுள்ள. ஆடு. மாடு மேய்த்தலில் அனுபவமுள்ள ஆண் வேலையாட்கள் தேவை.
- போதைப்பழக்க வழக்கம் அற்றவர்கள் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
- அடிப்படைச் சம்பளம் + மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் 5 நாட்கள் விடுமுறை உள்ளடங்கலாக மாதச்சம்பளம் **67000 + EPF + ETF** வழங்கப்படும்.

**இடம் : கெற்பேலி மத்தி, மிருசுவில்.**

(CS/57894)J-1

தொடர்பு:- 076 200 1700



## A/L - 2027

**கலை** **வர்த்தகம்**

**ஆரம்பம்: 05.04.2025**
**காலை: 9.00 மணி (சனி)**

DMI யாழ்நகர் T.P.:077 848 0604

(cs.57828) N-1


# காலாட் படையின் புத்தாண்டு விழா

51ஆவது காலாட் படைகளால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள தமிழ் - சிங்களப் புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி மு.ப.8 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், தலையணைச் சண்டை, சறுக்கு மரம் ஏறுதல், முட்டி உடைத்தல், அழகுராணிப்போட்டி, கயிறு இழுத்தல், ஓலை பின்னுதல், கோலம்போடுதல், வினோத உடைப்போட்டி உள்ளிட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளன. வெற்றியாளர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அநுரவுக்கு எதிராக முறைப்பாடு!

ஜனாதிபதி அநுரவுக்கு எதிராக ஐக்கிய குடியரசு முன்னணியால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களை எவ்விதமான அடிப்படைகளும் இல்லாமல் ஊழல்வாதிகள் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது அநீதி என்று குறிப்பிட்டே இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (ம)


## வேலையாட்கள் தேவை

கட்டுமான நிறுவனம் ஒன்றிற்கு (மேசன் / கூலி / மாபிள் வேலை) தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு:- 072 5646 735




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.